வகுப்பு எண்

# மாதிரி காலாண்டுத் தேர்வு–2024–25

வகுப்பு 11 பொருளியல் காலம்:2.30

மதிப்பெண்கள்:90

## Part – I

**I. சரியான விடையை அதன் குறியீட்டுடன் தேர்ந்தெடுத்து எழுதுக. 20 x 1 = 20**

1. விற்பனை செய்யும் பொருட்களை எதனால் பெருக்கினால் மொத்த வருவாய் கிடைக்கும் ?
அ) விலை ஆ) மொத்த செலவு இ) இறுதி சமநிலை வருவாய் ஈ) இறுதி சமநிலை செலவு
2. தனிக் கருத்திலிருந்து பொதுக்கருத்தை பெறும் முறை
அ) பகுத்தாய்வு முறை ஆ) தொகுத்தாய்வு முறை இ) இயல்புரை முறை ஈ) நெறியுரை முறை
3. பொருளியல் என்ற சொல்லின் பொருள்
அ) நாடுகளின் நிர்வாகம் ஆ) வங்கிகளின் நிர்வாகம் இ) இல்லங்களின் நிர்வாகம் ஈ) இவை அனைத்தும்
4. நுகர்வோர் சமநிலையில் இருக்கும் போது இறுதிநிலைப் பயன்பாடானது……….இருக்கும்.
அ) குறைவாக ஆ) எதிர்மறை இ) சமமாக ஈ) கூடுதலாக
5. கீழ்கண்ட விதியை தேவை விதி அடிப்படையாக கொண்டுள்ளது அ) குறைந்து செல் விளைவு விதி
ஆ) குறைந்து செல் இறுதிநிலை பயன்பாட்டு விதி இ) இரண்டும் ஈ) எதுவுமில்லை
6. சமநோக்கு வளைகோடுகள் ……….. அ) செங்குத்து கோடுகள் ஆ) படுகிடை கோடுகள்
இ) எதிர்மறை சரிவுடையது ஈ) நேர்மறை சரிவுடையது
7. தேவை நெகிழ்ச்சி என்ற கருத்தை அறிமுகப்படுத்தயவர்
அ) கீன்ஸ் ஆ) மால்தஸ் இ) மார்ஷல் ஈ) நைட்
8. மனிதனால் உருவாக்கப்பட்ட உற்பத்திக்காரணி எது ?
அ) நிலம் ஆ) உழைப்பு இ) மூலதனம் ஈ) தொழில் அமைப்பு
9. தனக்குச் சொந்தமான வளங்களை நிறுவனம் பயன்படுத்துவதற்கான செலவு என்பது
அ) உள்ளுறு செலவு ஆ) வெளியுறு செலவு இ) பொருளாதார செலவு ஈ) இவை அனைத்தும்
10. ஒரு புத்தகம் ரூ.10 வீதம் 40 புத்தகங்களை விற்கிறார் எனில் அவருக்கு கிடைக்கும் மொத்த வருவாய்
அ) 100 ஆ) 200 இ) 300 ஈ) 400
11. விலைத் தலைமை அம்சம் கொண்ட அங்காடி
அ) நிறைவுப்போட்டி ஆ) முற்றுரிமை இ) சில்லோர் முற்றுரிமை ஈ) முற்றுரிமைப்போட்டி
12. நிறைவுப் போட்டி அனுமானிப்பது …… அ) ஆடம்பர பண்டம் ஆ) வேறுபடுத்தப்பட்ட பண்டம்
இ) ஒத்த தன்மையுடைய பண்டம் ஈ) இவை அனைத்தும்
13. பொருளியலில் வருமானப் பகிர்வு என்பது முக்கியமாக எதனுடன் தொடர்புடையது.
அ) உற்பத்தி காரணிகள் ஆ) வணிகர்கள் இ) பொருளாதார வளர்ச்சி ஈ) பொருளாதார முன்னேற்றம்
14. எந்த வகை அங்காடியில் போட்டியே இராது ?
அ) நிறைவுப் போட்டி ஆ) முற்றுரிமை இ) முற்றுரிமைப் போட்டி ஈ) சில்லோர் முற்றுரிமை
15. எச்ச உரிமை கூலிக் கோட்பாட்டை எடுத்துரைத்தவர் ………..
அ) கீன்ஸ் ஆ) வாக்கர் இ) ஹாலே ஈ) நைட்
16. தனி நபர்களுக்கு நாட்டின் செல்வத்தை பகிர்ந்தளிப்பது
அ) செயல் முறைப் பகிர்வு ஆ) தனி நபர் பகிர்வு இ) பண்டங்களின் பகிர்வு ஈ) பணிகளின் பகிர்வு
17. ஜனநாயக சமதர்மத்தை கொண்டுவந்தவர்
அ) ஜவகர்லால் நேரு ஆ) மோதிலால் நேரு இ) காரல் மார்க்ஸ் ஈ) மகலநோபிஸ்
18. வலுவான பொருளாதாரங்களைக் கொண்ட நாடுகள் வரிசையில் இந்தியாவின் இடம்
அ) நான்கு ஆ) ஏழு இ) ஐந்து ஈ) பத்து
19. இந்தியாவின் பசுமைப் புரட்சியின் தந்தை…….
அ) மகலநோபிஸ் ஆ) M.S.விஸ்வநாதன் இ) M.S.சுவாமிநாதன் ஈ) M.S.அரங்கநாதன்
20. நிதி ஆயோக் எப்போது ஏற்படுத்தப்பட்டது ?
அ) ஜனவரி 1 2015 ஆ) ஜனவரி 1 2016 இ) ஜனவரி 1 2022 ஈ) ஜனவரி 1 2010

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

## Part - II

**II.ஏதாவது ஏழு வினாக்களுக்கு விடையளி. வினா எண் 30-க்கு கட்டாயம் விடையளி** 7X2=14.

21. பண்டங்களை பணிகளிலிருந்து வேறுபடுத்துக.
22. கிஃபன் பொருள்கள் எவை ? அவை ஏன் அவ்வாறு அழைக்கப்படுகின்றன ?
23. உழைப்பு வரையறு.
24. மாறாச் செலவு என்றால் என்ன ?
25. அமிழ்த்தப்பட்ட செலவு அல்லது மூழ்கும் செலவுகள் என்றால் என்ன ?
26. விற்பனைச் செலவு என்றால் என்ன ?
27. நீர்மை விருப்பத்தின் பொருள் யாது ?
28. முன்னேறிய பொருளாதாரத்தின் இரண்டு இயல்புகளைகூறுக.
29. பசுமைப் புரட்சியின் பலவீனங்களைப் பட்டியலிடுக.
30. சுதந்திரம் அடைவதற்கு முன் இந்தியாவில் காணப்பட்ட பல்வேறு வகையான நில உடைமை முறைகள் யாவை ?

## Part-III

**III.ஏதாவது ஏழு வினாக்களுக்கு விடையளி. வினா எண் 40-க்கு கட்டாயம் விடையளி** 7X3=21

31. பொருளாதாரத்தைப் பற்றி இலயனல் ராபின்சின் இலக்கணத்தை ஆராய்க.
32. நுகர்வோர் எச்சத்திற்கு மார்ஷலின் இலக்கணத்தைத் தருக.
33. தொழில் முனைவோரின் பணிகள் யாவை ?
34. நீண்டகால சராசரிச் செலவு வளைக்கோடு பற்றி குறிப்பு வரைக ?
35. சில்லோர் முற்றுரிமையின் பண்புகளை விளக்குக.
36. சும்பீட்டரின் புத்தாக்க இலாப கோட்பாட்டினை விவரி.
37. கிராம சர்வோதயம் – சிறு குறிப்பு வரைக..
38. வாரம் மற்றும் போலி வாரம் வேறுபடுத்துக.
39. காரணியின் இறுதிநிலை உற்பத்தியை வரையறு.
40. நலப்பொருளாதாரம் பற்றி அமர்த்தியாசென்னின் கருத்துக்களைஎழுதுக.

## Part – IV

**IV.அனைத்து வினாக்களுக்கும் விடையளி**

7X5=35

41. பொருளியலின் தன்மை மற்றும் எல்லைகளை விவரி. (அல்லது)
உற்பத்தி வாய்ப்பு வளைகோட்டை கொண்டு பொருளாதாரத்தின் அடிப்படை பிரச்சனைகளை விவரி.

42. குறைந்து செல் பயன்பாட்டு விதியின் படம் வரைந்து விளக்கம் தருக ? (அல்லது)
மாறும் விகித விளைவு விதியை வரைபடத்துடன் விளக்குக.

43. பல்வேறுபட்ட விலையில் AR மற்றும் MR கோடுகளிடையே உள்ள உறவுகளை விளக்குக ? (அல்லது)
மொத்தச் செலவு (TC)= 10+Q3, Q = 5 எனில் AC, AVC, TFC, AFC ஆகியவற்றைக் கண்டுபிடி.

44. முற்றுரிமையில் விலை, பண்டத்தின் அளவு எவ்வாறு நிர்ணயிக்கப்படுகின்றன ? (அல்லது)
நிறைவுப்போட்டியின் இயல்புகளை விளக்கவும் ?

45. ரிக்கார்டோவின் வாரக் கோட்பாட்டினை ஆராய்க. (அல்லது)
கடன் நிதி வட்டிக்கோட்பாட்டினை விவரி ?

46. இந்தியப் பொருளாதாரத்தின் வலுவான அம்சங்களை விவரி. (அல்லது)
காந்தியப் பொருளாதாரக் கருத்துகளை சுருக்கமாக எழுதுக.

47. ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் இந்தியப் பொருளாதாரம் பற்றி விவாதிக்க ? (அல்லது)
பொருளாதார முன்னேற்றத்தில் சிறு தொழில் நிறுவனங்களின் பங்கினை விவரி.

A.Alexis.PG.Tr.Don Bosco Hr.Sec.School,Varadharajanpet. Ariyalur.Dt, 621805 .Cell:9543776128



www.Padasalai.Net